**செப்டம்பர் – 11**

# TNPSC துளிகள்

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள 6 அரசு மருத்துவமனைகளில் உள்ள ஆயுஷ் பிரிவில் (Ayush Block) நோயாளிகளுக்கு வர்ம சிகிச்சை அளிக்கப்படவிருக்கிறது.
- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர் மலர்வதை கொண்டாடுவதற்காக நீலகிரி மாவட்டமானது செப்டம்பர் 12 ஆம் தேதியை 'குறிஞ்சி மலர் தினமாக' அனுசரிக்க முடிவு செய்துள்ளது.
  - நீலகிரியில் வெவ்வேறு வகையான 9 வகை குறிஞ்சி மலர்கள் பூக்கின்றன. இந்தியா முழுவதும் 32 வகையான குறிஞ்சி மலர்கள் பூக்கின்றன.
- உறுப்பு தானத்திற்காக காத்திருப்போர் பதிவேட்டில் இந்தியர்கள் பதிவு செய்ய ஆதார் அடையாள அட்டை அவசியம் என்று தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம் (TRANSTAN - Transplant Authority of Tamilnadu) அறிவித்துள்ளது.
  - வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அவர்களது தூதரகத்தில் 'தடையின்மைச் சான்றிதழைப்' பெற்று TRANSTAN-ல் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.
- உத்திரப்பிரதேச மாநிலத்தில் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் மறைவிற்குப் பிறகு அவரது நினைவாக லக்னோவின் புகழ்பெற்ற 'ஹஸ்ரத்கன்ஞ் சவ்ராஹா' ஆனது 'அடல் சவுக்' என்று பெயர் மாற்றப்படவிருக்கிறது.
  - மேலும் உத்திரப் பிரதேச மாநில அரசானது ஆக்ராவின் பட்டேஸ்வரில் உள்ள வாஜ்பாயின் முன்னோர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாகவும் சுற்றுலாத் தளமாகவும் மாற்ற முடிவு செய்துள்ளது.
- மத்தியப் பணியாளர், பொது மக்கள் குறைபாடுகள், ஓய்வூதியத் துறை அமைச்சகமானது மத்தியப் பிரதேசத்தின் போபாலில் 'நல்லாட்சியுடன் கூடிய உயர் இலட்சிய மாவட்டங்களில் கவனத்தை செலுத்துதல்' மீதான பிராந்தியக் கருத்தரங்கை நடத்தியது.
- இமாச்சலப் பிரதேசத்தின் கின்னூர் மாவட்டத்தில் உள்ள லிப்பா-அசரா வனவிலங்கு சரணாலயத்தின் 4000 மீட்டர் உயரத்தில் பனி சிறுத்தை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - கடந்த ஆண்டு பனிச் சிறுத்தையானது 'அழிவு நிலை இனங்கள்' எனும் வகைப்பாட்டில் இருந்து 'மறையத்தகு உயிரினங்கள்' எனும் வகைப்பாட்டிற்கு பாதுகாப்புப் பட்டியலில் நிலை மாற்றப்பட்டுள்ளது.
- டிரிபிள் ஜம்பரான அர்பிந்த் சிங் IAAF காண்டினன்டல் கோப்பையில் பதக்கம் வென்ற முதலாவது இந்திய வீரர் ஆவார். இவர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- கம்போடியாவின் பிரதமராக ஹுன் சென் மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அர்ஜெண்டினாவின் மென்டோசாவில் G20-ன் முதலாவது கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மீதான அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.
- வளைகுடா நாடுகளில் முதலாவதாக கத்தார் நாடானது சில வெளிநாட்டைச்

சேர்ந்தவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு அட்டைகள் மற்றும் சில உரிமைகளை வழங்கவிருக்கிறது.

 - இந்தப் புதிய விதியின்படி, புதிய நிரந்தர குடியிருப்பு அட்டைகளைப் பெற்றவர்கள் கத்தார் நாட்டைச் சேர்ந்தவர்களாகவே கருதப்படுவார்கள். மேலும் இந்த அடையாள அட்டையைப் பெற்றவர்கள் கல்வி, சுகாதார சேவைகள் உள்பட கத்தார் நாட்டின் நல உதவிகளைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

- வங்காள தேசத்தின் கடற்படை கப்பலான 'சமுத்ரா ஜாய்' நல்லிணக்கப் பயணமாக 4 நாட்களுக்கு விசாகப்பட்டினம் (கிழக்குக் கடற்படை) வந்தடைந்தது.
- இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் (IISER - Indian Institute of Science Education) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மலிவு விலையிலான மற்றும் நெகிழத்தக்க சூரிய மின்கலத்தை வைட்டமின் B12-ன் செயற்கை வகையைப் பயன்படுத்தி வடிவமைத்துள்ளனர்.
- அமெதியின் பிந்தாரா தாக்கூர் கிராமத்தில் உள்ள மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பொது சேவை மையத்தில் "டிஜிட்டல் கிராமத்தை" மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிரிதி ராணி துவக்கி வைத்தார்.
  - டிஜிட்டல் கிராமத் திட்டத்தின்படி, வை-பை அளிக்கும் இடம், LED விளக்கு தயாரித்தல், சுகாதாரத் துணிகள் தயாரிக்கும் பிரிவு மற்றும் பிரதம மந்திரி டிஜிட்டல் கல்வி முன்முயற்சி உள்ளிட்ட 206 திட்டங்கள் மக்களுக்கு அளிக்கப்படும்.
- அமெரிக்க ஓபன் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைப் பெற்ற முதலாவது ஜப்பானியப் பெண் வீராங்கனையாக நவோமி ஒசாகா உருவெடுத்துள்ளார்.
- புது தில்லியில் பித்யூத் சக்கரவர்த்தி எழுதிய 'இந்திய அரசியலமைப்பியல் - ஒரு கருத்துத் திட்டம்' என்ற நூலை குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கய்யா நாயுடு வெளியிட்டார்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது இரயில்வே பல்கலைக்கழகம்

- வதோதராவில் இந்த வாரத்தில் (செப்டம்பர்11) தேசிய இரயில் போக்குவரத்து நிறுவனம் (NRTI - National Rail and Transportation Institute) தொடங்கப்பட இருக்கிறது.
- போக்குவரத்துத் துறையில் நாட்டின் முதலாவது பல்கலைக்கழகம் இதுவாகும்.
- தற்பொழுது இது வதோதராவில் உள்ள தேசிய இந்திய இரயில்வே அகாதெமியிலிருந்து செயல்பட்டு வருகிறது.
- இதற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் நிதியளிக்கிறது. இதன் சர்வதேசப் பங்காளர்கள் கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்கிலி மற்றும் கார்னெல் பல்கலைக்கழகம் ஆகியவை ஆகும்.

## பெண்களுக்கான பாதுகாப்பு நகரத் திட்டம்

- மத்திய அரசாங்கமானது நிர்பயா நிதியின் கீழ் எட்டு நகரங்களுக்கு (தில்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத் மற்றும் லக்னோ) பாதுகாப்பு நகரத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கியுள்ளது.
- தெரு விளக்குகள், பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து, காவல் துறை மற்றும் இதர திட்டங்களை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பிரச்சனைகளைக் களைந்து பெண்களுக்கு பாதுகாப்பான நகரத்தை ஏற்படுத்துதல் இதன் நோக்கமாகும்.
- இத்திட்டமானது போக்குவரத்தின்போது பெண்கள் மற்றும் குழந்தைகள் துயிலுமிடம், பொலிவுறு LED தெரு விளக்குகள், ஒரு முனை நெருக்கடி மையம், பொது பாதுகாப்பு பொத்தான் மற்றும் தடயவியல் மற்றும் இணையவழி குற்றப்பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## இணையவழி பிரச்சனைகளை களைவதற்கான குழு

- மத்திய அரசாங்கமானது இணைய வழி வணிகப் பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்காக பல்துறை செயலாளர்கள் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- மத்திய தொழிற்துறைக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலாளர் இக்குழுவின் தலைவர் ஆவார்.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலாளர் மற்றும் வணிகத் துறையின் செயலாளர் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்ற உறுப்பினர்கள் ஆவார்.
- மேலும் நிதி ஆயோக் மற்றும் பொருளாதார விவகாரங்கள் துறையின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

## இந்தியாவின் நீளமான இரயில் சாலை கலப்புப் பாலம்

- அஸ்ஸாமின் பிரம்மபுத்திராவின் மீது சாலை மற்றும் இரயில் கலப்புப் பாலமான போகிபீல் பாலம் நீளமான பாலமாகும். இது மேல் தளத்தில் 3 சாலை பாதைகளையும் கீழ் தளத்தில் இரு இரயில் பாதைகளையும் கொண்டுள்ளது.
- 4.94 கிலோ மீட்டர் தூரமுள்ள இந்தப் பாலமானது அருணாச்சல பிரதேசம் மற்றும் அஸ்ஸாமின் கிழக்குப் பகுதியில் உள்ள பிரம்மபுத்திரா நதிக்கரையின் வடக்கு மற்றும் தெற்கு கரைகளை இணைக்கும் சாலை மற்றும் இரயில் போக்குவரத்தை அளிக்கிறது.



- இந்தியாவின் மிக நீளமான இரயில் சாலை பாலம் போகிபீல் பாலமாகும். மேலும் 9.15 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை பாலமான தோலா-சதியா பாலத்திற்கு அடுத்து பிரம்மபுத்திராவின் மீது அமைந்த இரண்டாவது மிகப்பெரிய பாலம் இந்தப் பாலமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## 2 நீர்ப்பாசன வசதிகளுக்கு பாரம்பரிய அடையாளம்

- பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்புகள் ICID பதிவுகளில் தெலுங்கானா அரசாங்கத்தின் இரண்டு பரிந்துரைகள் கனடாவில் நடைபெற்ற சர்வதேச நிர்வாக ஆணையக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- இந்த ஆணையமானது நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் அமைப்பின் சர்வதேச ஆணையத்தின் (ICID - International Commission on Irrigation and Drainage) உயரிய முடிவு எடுக்கும் அமைப்பாகும்.
- நிர்மல் மாவட்டத்தில் கோதாவரி ஆற்றின் குறுக்காக அமைந்த சதர்மத் அணைக்கட்டு மற்றும் கமரெட்டி மாவட்டத்தின் பெடா செருவு ஆகியவை பரிந்துரைக்கப்பட்ட இரண்டு நீர்ப்பாசன வசதிகள் ஆகும்.



- ICID என்பது உலகம் முழுவதும் நீர்ப்பாசனம், வடிகால் அமைப்பு மற்றும் வெள்ள

மேலாண்மை வல்லுனர்களைக் கொண்ட அரசுசாரா தொழில் நிறுவனம் ஆகும்.

## மில்லெக்ஸ் (Milex) - 2018

- பீம்ஸ்டெக்கின் (BIMSTEC - பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு அமைப்பு) முதலாவது தீவிரவாத எதிர்ப்பு இராணுவப் பயிற்சியானது மஹாராஷ்டிராவின் புனேவில் நடைபெற்றது.
- இந்தியா, இலங்கை, வங்க தேசம், பூட்டான் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவம் மட்டும் இப்பயிற்சியில் பங்குபெற்றன.
- மில்லெக்ஸ் - 2018 பயிற்சிக்கு நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் பார்வையாளர்களை மட்டும் அனுப்பின.
- இப்பயிற்சியின் நோக்கம் உறுப்பு நாடுகளுக்கிடையே தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டுவிளைவை உருவாக்குவது, சரியாக புரிந்து கொள்ளுவது மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவ மன்றத்தை உருவாக்குவது ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## இந்தியாவின் முதலாவது கரு மாற்றப்பட்ட கன்று

- கரு மாற்று தொழில்நுட்ப உதவியுடன் இந்தியாவின் முதலாவது பெண் கன்று பிறந்துள்ளது.
- இத்திட்டம் தேசிய பால்வள மேம்பாட்டு குழுவின் உதவியுடன் ஜம்மு காஷ்மீரில் உள்ள கால்நடை வளர்ப்பு துறையினால் மேற்பார்வையிடப்பட்டது.
- மத்திய கால்நடை வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி பண்ணையில் 'சஹிவால்' இனத்தின் கன்றானது கலப்பு ஜெர்சி மாட்டிற்குப் பிறந்தது.
- எம்பிரையோ பரிமாற்றம் என்பது கருத்தரித்தலை ஏற்படுத்துவதற்காக கருமுட்டையை கர்ப்பிணிப் பெண்ணின் இனப்பெருக்கக் குழாயிலிருந்து கருமுட்டையைப் பெறும் பெண்ணின் கருப்பைக்கு மாற்றுவதாகும். மனிதன் மற்றும் விலங்குகள் ஆகிய இருவருக்கும் இந்த உத்தி பயன்படுகிறது.

## முக அங்கீகாரத்தைப் பயன்படுத்தும் ஆசியாவின் முதலாவது விமான நிலையம்

- விமான நிலையத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு செல்வதற்காகவும் பயணிகள் விமானத்தில் பயணிப்பதற்கு அனுமதி பெறும் செயல்முறைகளுக்காகவும் முக அங்கீகாரத்தை பயன்படுத்தும் ஆசியாவின் முதலாவது விமான நிலையம் பெங்களூருவில் உள்ள கெம்பகௌடா சர்வதேச விமான நிலையமாகும்.
- ஆசியாவில் முக அங்கீகார அடிப்படையில் செயல்படுத்தும் முதல் சோதனை முயற்சி இதுவாகும். மேலும் இது ஆசியாவில் மிகப் பெரியது ஆகும்.
- மேலும் அரசாங்கத்தால் வலியுறுத்தப்படும் டிஜிட்டல் இந்தியா பிரச்சாரத்தின் முக்கிய நடவடிக்கைகளில் இது ஒன்றாகும்.

- இந்த அமைப்பின் முதல் செயல்படுத்துதல் 2019-ல் முடிவடையவிருக்கிறது. ஜெட் ஏர்வேஸ், ஏர் ஆசியா மற்றும் ஸ்பைஸ் ஜெட் ஆகிய விமானங்களின் பயணிகள் இதைப் பயன்படுத்தும் முதல் பயணிகள் ஆவர்.

- - - - - - - - - - - - - - -